# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## R.L.T.O.P.No.3 of 2023

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சரவணன் |
| தந்தை பெயர் | : | திரு. தண்டபாணி |
| மனுதாரர் சாட்சி | : | 2 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 10.07.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

மனுதாரர் சாட்சி-2 அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

மனுதாரர் சங்கம் தொடர்பான ஆவணங்கள் அணைத்தும் சங்கத்தின் தலைவர், செயலாளர் போன்ற பொறுப்பில் உள்ள நபர்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும் என்றால் சரிதான். உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டால் சங்கத்தின் வரவு-செலவு கணக்கு ஆவணங்கள் அணைத்தையும் பொறுப்பாளர்கள் காண்பிப்பார்கள். சங்கத்தின் வரவு-செலவு கணக்குகள் பற்றிய விபரங்களை நான் பொறுப்பாளர்களிடம் கேட்டிருக்கிறேன். சுமார் ஆறு மாதம் முன்பு அவ்வாறு கேட்டேன். என்னிடம் வரவு - செலவு கணக்கு பதிவேடுகள் காட்டப்பட்டன.

2. இந்த மனுதாரர் சங்கத்திற்கு சொந்தமான கடைகள் மற்றும் அது சம்மந்தப்பட்ட வாடகை கணக்கு ஆகியவற்றை நான் பார்த்தேன். சங்கத்தின் இணைச் செயலாளராக கடந்த 2023-ம் ஆண்டு நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நான் சங்கத்தின் இணைச் செயலாளராக இருப்பதால் 2023-ம் ஆண்டு முதல் சங்கத்தின் கணக்கு வழக்கு பதிவேடுகளை பார்ப்பதற்கு எனக்கு உரிமை உண்டு என்றால் சரிதான்.

3. எதிர்மனுதாரர் விஜயானந்த் சங்கத்தின் கடையை எப்போது வாடகைக்கு கேட்டுப் பெற்றார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமான என்றால் தெரியும். 2019-ம் ஆண்டு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. 2019-ம் ஆண்டிற்கு முன்னர் இருந்த ஆவணங்களைப் பார்த்து எதிர்மனுதாரரின் வாடகை ஒப்பந்தம் எழுதப்பட்டது. நான் எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்ட கடையை தினசரி அந்த வழியாக செல்லும்போது பார்ப்பது வழக்கம்.

4. **கடை எண்-13 மற்றும் 14 இடையே இருந்த தாய்ச்சுவரை எதிர்மனுதாரர் முற்றிலுமாக இடித்து அகற்றிவிட்டார். தாய்ச்சுவர் என்பது ஒரு கட்டிடத்தை முழுமையாக தாங்கி நிற்கும் சுவர் என்றால் சரிதான். பிரச்சனைக்குரிய சுவர் இடிக்கப்பட்டு சுமார் இரண்டே முக்கால் ஆண்டுகள் ஆகிறது. இரண்டு கடைகளுக்கும் நடுவே இருந்த சுவற்றை அகற்றி எதிர்மனுதாரர் அவைகளை ஒரே கடையாக புதுப்பித்து வைத்துள்ளார் என்றால் சரிதான்.**

**5.** சுவர் இடிக்கப்பட்டுள்ளதால் கட்டிடத்தின் உறுதித்தன்மை பாதிக்கப்பட்டு கடைக்கட்டிடம் அபாயகரமான நிலையில் உள்ளது. கட்டிடத்தின் உறுதித் தன்மை பாதிக்கப்பட்டது என்பதை உறுதி செய்வதற்கு நீதிமன்றம் மூலம் வழக்கறிஞர் முன்னிலையில் தகுதி வாய்ந்த பொறியாளர் நியமிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. இரு கடைகளுக்கும் இடையே இருந்த சுவர் தாய்ச்சுவர் அல்ல என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் தனது எதிர் உரையில் கட்டிடம் 1975-ம் ஆண்டு தனது தாத்தா அழகப்பா ஆச்சாரி கட்டியது என்று சொல்லியுள்ளார் அது தவறான விபரமாகும். கடைகளை 1950-ம் ஆண்டு முதல் பராமரிப்பு செய்ததற்கான செலவு கணக்குகள் சங்கத்திடம் உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு விடும் சமயத்தில் தற்போது உள்ள கட்டிடம்தான் வாடகைக்கு கொடுக்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் சங்கத்திடம் உள்ளது.

7. தற்போது உள்ள கட்டிடம் எதிர் மனுதாரரின் தாத்தாவால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு 32/2023 வழக்கில் எதிர்மனுதாரர் ஒவ்வொருமாதமும் வாடகையை கடலூர் கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் செலுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எதிர் மனுதாரர் வாடகை பாக்கி எதுவும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. வாடகை ஒப்பந்தம் முடிந்த பிறகு நாங்கள் வாடகையை வாங்கவில்லை. எதிர்மனுதாரர் கட்டிடம் கட்டியுள்ளதால் இந்த மனு இந்த நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

8. இந்த மனு சொத்து எதிர்மனுதாரர்களால் கட்டப்பட்டது என்பதால்தான் சங்கத்தின் ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.